## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC.799/2025**

| Deposition of Name | குருமூர்த்தி SSI-322 | Prosecution | LW-10 as PW-1 |
|---|---|---|---|
| Father Name | ராஜாங்கம் | Defence | |
| Station | புதுப்பட்டினம் PS | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 56 /2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**11.03.2026. எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கலியமூர்த்தி அவர்களின் கையெழுத்தும், கையொப்பமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் அவர்களுக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 02.01.2024ம் தேதி காலை 9.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் கலியமூர்த்தி நிலைய பொறுப்பில் இருந்த போது 01.01.2024 ம் தேதி சீர்காழி GH யிலிருந்து கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து வந்த குருஸ்பால் என்பவரை விசாணை செய்து வாக்குமூலம் பெற்று புதுப்பட்டினம் காவல்நிலைய குற்ற எண்.3/2024 இ.த.ச பிரிவுகள் 279, 338 ஆக கடந்த 02.04.2024 ம் தேதி 9.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. வழக்கு கோப்புகளை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஜெயராமன் மற்றும் குபேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி **ஆவணங்கள் அ.சாஆ 3 மற்றும் 4**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

4. வழக்கின் எதிரியை தேடிய நிலையில் கடந்த 10.01.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு புதுப்பட்டினம் காவல் நிலையம் வந்து ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். TN 82 T 3129 மற்றும் TN 82 **V 7248** ஆகிய இரண்டு வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி அவரை விசாரணை செய்து அவரிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார். அந்த ஆய்வறிக்கைகள் **அசாஆ.5 மற்றும் அசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார்தாரருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களை விசாரணை செய்து செய்துவாக்குமூலம் பெற்று அவர்களிடமிருந்து காயச்சான்றுகள் **அசாஆ.7 மற்றும் அசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கடந்த 13.03.2024 ஆம் தேதி இந்த வழக்கு விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 338 கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நிலுவையில் உள்ள வழக்கை முடிக்கவேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கை சரியாக விசாரணை செய்யாமல் எதிரி மீது இறுதி அறிக்கை தவறுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**